4–12–2021 அன்று உடல் நலக்குறைவால் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அரசியலில் முதிர்ந்த அனுபவம் கொண்ட டாக்டர் கோ. ரோசய்யா அவர்கள், ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சராகவும், தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களின் ஆளுநராகவும் பணியாற்றியவர். மேலும், அவர் சட்டமன்ற உறுப்பினர், மேலவை உறுப்பினர் மற்றும் மக்களவை உறுப்பினராகவும் சிறப்புறப் பணியாற்றியவர். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) இந்திய முப்படைத் தலைமைத் தளபதி திரு. பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் இராணுவ உயர் அலுவலர்கள் ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய முப்படைத் தலைமைத் தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் 11 இராணுவ உயர் அலுவலர்கள் 8–12–2021 அன்று ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தது குறித்தும், அவ்விபத்தில் படுகாயமுற்று சிகிச்சைபெற்று வந்த குரூப் கேப்டன் வருண் சிங் 15–12–2021 அன்று உயிரிழந்தது குறித்தும் இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. தாய்த் திருநாட்டின் வீரத் திருமகனாக முழுமையாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றியவர் முப்படைத் தலைமைத் தளபதி பிபின் ராவத் அவர்கள். தீரமும் கடமையுணர்வும் கொண்டு பணியாற்றியவர் குரூப் கேப்டன் வருண் சிங் அவர்கள். இராணுவ உயர் அலுவலர்களின் மறைவு இந்திய நாட்டிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். இந்த ஹெலிகாப்டர் விபத்தில் தனது இன்னுயிரை இழந்த இந்திய முப்படைத் தலைமைத் தளபதி திரு. பிபின் ராவத், அவரது மனைவி மற்றும் 11 இராணுவ உயர் அலுவலர்கள் மற்றும் விபத்தில் காயமுற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்த குரூப் கேப்டன் வருண் சிங் ஆகியோரது குடும்பத்தினருக்கும், இந்திய இராணுவத்திற்கும், இந்நாட்டு மக்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(இ) திரு. வே. துரைமாணிக்கம், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்

2022 ஜனவரி 6] [பேரவைத் தலைவர்]

மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு. வே. துரைமாணிக்கம் அவர்கள் 2–11–2021 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் பிறந்த திரு. வே. துரைமாணிக்கம் அவர்கள் பொதுவுடைமைச் சிந்தனைகளோடு உழவர்களுக்கான உரிமைக் குரலை எழுப்பியவர். காவேரி உரிமைப் போராட்டத்தில் பெரும்பங்காற்றியவர். அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், பொதுவுடைமைத் தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஈ) திரு. புனீத் ராஜ்குமார், பிரபல கன்னடத் திரைப்பட நடிகர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கன்னடத் திரைப்பட உலகின் 'பவர் ஸ்டார்' என போற்றப்படும் பிரபல கன்னடத் திரைப்பட நடிகர் திரு. புனீத் ராஜ்குமார் அவர்கள், 29–10–2021 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. மறைந்த பழம்பெரும் கன்னட நடிகர் திரு. ராஜ்குமார் அவர்களின் மகனான திரு. புனீத் ராஜ்குமார் அவர்கள் கன்னடத் திரைப்படத் துறையில் பெரும் புகழ் கொண்ட நட்சத்திரமாக விளங்கியபோதும், எளிமையான மனிதராக விளங்கியவர். ஏழையெளிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பெரும் உதவி புரிந்தவர். அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் கன்னடத் திரையுலகினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.*

(உ) பேராயர் டெஸ்மண்ட் டுட்டு, மனித உரிமைச் செயற்பாட்டாளர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தென் ஆப்பிரிக்காவில் நிறவெறிக்கு எதிராகப் போராடிய மனித உரிமைச் செயற்பாட்டாளர் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு அவர்கள் 26–12–2021 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. பேராயர் டெஸ்மண்ட் டுட்டு அவர்கள், உள்நாட்டுப் போரின்போது அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை அரசிற்கு எதிராக, 2013 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த காமன்வெல்த்*